Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, நவம்பர் 23, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 132

## புதுப்பொலிவுடன் ரீ-ரிலீஸ¬க்கு தயாராகும் பாபா மறு படத்தொகுப்புடன் டிஜிட்டலில் மெருகேற்றப்பட்ட பாபா ; விரைவில் வெளியீடு



சென்னை, நவம்பர் 23 2022: 2002ல் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான படம் பாபா. இந்தப்படத்திற்கு கதை, திரைக்கதை எழுதியதுடன் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்தே படத்தை தயாரித்தும் இருந்தார். அண்ணாமலை, வீரா, பாட்ஷா படங்களின் தொடர் வெற்றிக்கு பிறகு ரஜினிகாந்த் நடிப்பில் நான்காவது முறையாக இந்த பாபா படத்தை இயக்கினார் இயக்குனர் சுரேஷ் கிருஷ்ணா. கதாநாயகியாக மனிஷா கொய்ராலா நடிக்க, முக்கிய வேடங்களில் கவுண்டமணி, டெல்லி கணேஷ், சுஜாதா, எம்.என்.நம்பியார் ஆஷிஷ் வித்யார்த்தி, சாயாஜி ஷிண்டே, சங்கவி, கருணாஸ் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். மேலும் முக்கிய கதாபாத்திரத்தில் ரியாஸ் கான் நடித்திருந்தார்.

ஏ.ஆர்.ரஹ்மான் இந்தப்படத்திற்கு இசையமைத்திருந்தார். பிருந்தா, பிரபுதேவா மற்றும் லாரன்ஸ் ஆகியோர் நடன இயக்குனர்களாக பணிபுரிந்தனர். மகா அவதார் பாபாஜியை மையமாக கொண்டு எடுக்கப்பட்ட இந்த படம், வெளியான சமயத்தில், பல அதிர்வலைகளை ஏற்படுத்தியது. குறிப்பாக இந்தப்படத்தில் சூப்பர்ஸ்டார் ரஜினி அடிக்கடி காட்டும் அந்த பாபா முத்திரை, படம் வெளியான சமயத்தில் குழந்தைகளையும் வசீகரித்து, இப்போதுவரை அவருக்கான ஒரு தனி அடையாளமாகவே கருதப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது இந்தப்படம் மீண்டும் புதுப்பொலிவுடன் புதிய திரையிடலுக்கு தயாராகி உள்ளது. இதற்காக முற்றிலும் புதிய கோணத்தில் இந்தப்படம் புதிதாக மறு படத்தொகுப்பு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, இந்த நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப கலர் கிரேடிங் செய்யப்பட்டு டிஜிட்டலில் ஒவ்வொரு பிரேமும் இன்னும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 'மாயா மாயா', 'சக்தி கொடு', 'கிச்சு கிச்சு' என ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் ரசிகர்களின் மனதில் நீங்காமல் நிறைந்துள்ள இந்தப்படத்தின் பாடல்கள் அனைத்தும் புதிதாகவே ரீமிக்ஸ் செய்யப்பட்டு டால்பி மிக்ஸ் ஒலி அமைப்புக்கு மாற்றப்பட்டு உள்ளதால் மீண்டும் ஒரு புதிய அனுபவத்தை ரசிகர்களுக்கு தரும் என்பதில் சந்தேகமே இல்லை. படத்திற்கான சிறப்பு சப்தங்களும் கூட இன்னும் விறுவிறுப்பு கூட்டப்பட்டுள்ளன. விரைவில் இந்தப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகவுள்ளது.

தொழில்நுட்பக் குழு
ஒளிப்பதிவாளர் : சோட்டா கே நாயுடு
தொகுப்பாளர்: வி டி விஜயன்
கலை இயக்குனர்: ஜி கே
சண்டை பயிற்சி: பெப்சி விஜயன்
வரிகள்: கவிஞர் வாலி, கவிப்பேரரசு வைரமுத்து
மக்கள் தொடர்பு: ரியாஸ் கே அஹ்மத்.

## எஸ்.ஆர்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 25-வது பட்டமளிப்பு விழா




**சென்னை, நவம்பர் 23 2022: தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் டாக்டர்.தமிழிசை சௌந்தரராஜன் செங்கல்பட்டு மாவட்டம் ,காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற 25-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி மாணவர்களிடையே விழாப்பேருரையாற்றினார் உடன் பல்கலைக்கழக வேந்தர் பாரிவேந்தர் மற்றும் தலைவர் ரவி பச்சமுத்து கலந்து கொண்டனர்.**

## குழந்தைகளுக்கான புற்றுநோய் சிகிச்சைக்கு நிதி திரட்ட 'சென்னை ரன்ஸ்' மாரத்தான் நிகழ்வை நடத்தும் மெட்ராஸ் ரவுண்டு டேபிள்

சென்னை, நவம்பர் 23 2022: 65 ஆண்டுகளுக்கும் அதிகமாக சமூக சேவையில் ஈடுபட்டு வரும் இந்தியாவின் முதல் ரவுண்டு டேபிள் அமைப்பு என்ற பெருமையினைக் கொண்டிருக்கும் மெட்ராஸ் ரவுண்டு டேபிள் 1 (எம் ஆர் டி 1), இம்மாநகரில் டிசம்பர் 11-ம் தேதியன்று அறச்செயல் நோக்கத்திற்காக சென்னை ரன்ஸ் என்ற பெயரில் ஒரு மாரத்தான் நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்தவிருக்கிறது. குழந்தை பருவ புற்றுநோய் மீதான விழிப்புணர்வை உருவாக்குதல், நோய்ப்பாதிப்பை கண்டறிதல் மற்றும் சிகிச்சையளித்தல் என்ற குறிக்கோள்களுக்காக இயங்கும் ஒரு அரசுசாரா தொண்டு நிறுவனமான மகேஷ் மெமோரியல் டிரஸ்ட்-ன் ஒத்துழைப்போடு குழந்தைகளுக்கான புற்றுநோய் நேர்வுகளுக்கு சிகிச்சையளிக்க நிதி திரட்டும் நோக்கத்துடன் இந்த மாரத்தான் நிகழ்வு நடத்தப்படுகிறது.

கண் கண்ணாடிகள் மற்றும் கண்ணாடிகளுக்கான லென்ஸ்கள் துறையில் இயங்கிவரும் சர்வதேச அளவில் முதன்மை வகிக்கும் தொழில்நுட்ப பெருநிறுவனமான ஸைஸ் (ஜீவீமீஷ்வ), இந்தியாவில் கண் மருத்துவமனைகளின் முன்னணி வலையமைப்பு குழுமங்களுள் ஒன்றான டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை, வசந்த் & கோ, கல்யாண் ஜூவல்லர்ஸ், கோஷ் சொகுசு ரிசார்ட்ஸ், கேகேஎன் எனர்ஜி, அப்போலோ ஹெல்த்கேர், ஐடி ஃப்ரெஷ் ஃபுட் மற்றும் கோகோ கோலா இந்தியா ஆகிய நிறுவனங்களின் ஆதரவோடு அறச்செயல்பாட்டுக்கான இம்மாரத்தான் நிகழ்வு நடைபெறுகிறது.

சென்னை ரன்ஸ் என்ற பெயரில் முதல் பதிப்பாக நடைபெறும் இம்மாரத்தான் நிகழ்வு, பெசன்ட் நகரிலுள்ள ஆல்காட் நினைவு உயர்நிலைப் பள்ளி மைதானத்திலிருந்து ஆரம்பமாகும். பொதுமக்கள், மாணவர்கள், மற்றும் கார்ப்பரேட் பணியாளர்கள் என அனைவரும் பங்கேற்கக்கூடியவாறு 3 கிமீ, 5 கிமீ, 10 கிமீ மற்றும் 21 கிமீ வகையினங்களின் கீழ் இம்மாரத்தான் நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. திறனிழப்பு இருப்பினும் சேம்பியன்களாக திகழும் மாற்றுத்திறனாளிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஓடலாம். இந்நிகழ்வின் பங்கேற்பாளர்களுக்கு உயர் தரத்திலான டி-ஷர்ட் மற்றும் வெற்றிகரமாக ஓட்டத்தை முடித்ததற்கான பதக்கமும் வழங்கப்படும்.

5 கிமீ, 10 கிமீ மற்றும் 21 கிமீ தூரத்துடன் ஓட்ட நேரம் பதிவுசெய்யப்படுகிற வகையினங்களில் பங்கேற்கும் ஓட்டப்பந்தைய வீரர்களுக்கு மாரத்தான் ரேஸில் பங்கேற்பவர்கள் அணியும் கழுத்தாடையில் பதியம் செய்யப்பட்டுள்ள ஓட்ட நேரத்தை அளவிடும் ஒரு டைமிங் சிப் - ம் வழங்கப்படும். ஓட்டத்தை நிறைவுசெய்யும்போது நேரத்தை குறிப்பிட்டிருக்கிற ஒரு சான்றிதழையும் அவர்கள் பெறுவார்கள். 3 கிமீ தூரத்தைக் கொண்டிருக்கும் வகையினம் என்பது, ஓடுகின்ற நேரம் அளவிடப்படாத ஒரு நிகழ்வாக இருக்கும். 2022 நவம்பர் 25ம் தேதி வரை www.chennairuns.com என்ற வலைதளத்தில்




ஆன்லைன் முறையில் பொது மக்கள் இதில் பங்கேற்பதற்கு பதிவு செய்யலாம்.

மெட்ராஸ் ரவுண்டு டேபிள் 1-ன் (எம் ஆர் டி 1), தலைவர், டாக்டர். அஸ்வின் அகர்வால் இந்நிகழ்வு குறித்து பேசுகையில் கூறியதாவது: " உலகெங்கிலும் குழந்தைகளுக்கும், வளரிளம் பருவத்தினருக்கும் ஏற்படும் உயிரிழப்பில் முன்னணி காரணமாக புற்றுநோய் இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் 3 லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளுக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்படுகிறது.

இந்த எண்ணிக்கையில் ஏறக்குறைய 50,000 நபர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வு நடைபெறும்போது, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்களது வாழ்க்கை கதைகள், நடத்திய போராட்டங்கள் மற்றும் பாதிப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்வதற்கான செயல்உத்திகள் பற்றி பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும். பொதுமக்கள் தங்கள் உடல்நலத்தை சிறப்பாக பேணுவதற்கு, உத்வேகமளிப்பதற்கு இந்த பகிர்வு உதவும். இந்நிகழ்வின் மூலம் திரட்டப்படும் அனைத்து அன்பளிப்புகளும், பங்களிப்புகளும், புற்றுநோய் மீதான விழிப்புணர்வை அதிகரிப்பது, சிகிச்சைக்கான செலவுகளை எதிர்கொள்வது மற்றும் புற்றுநோய் பாதிப்புக்கான சாத்தியமுள்ள நபர்களுக்கு தொடக்க நிலை பரிசோதனையை மேற்கொள்வது ஆகிய குறிக்கோள்களுக்கான செயல்பாடுகளுக்கு செலவிடப்படும்."

மெட்ராஸ் ரவுண்டு டேபிள் 1-ன் (எம் ஆர் டி 1), நிதி திரட்டல் குழுவின் அமைப்பாளர் திரு. சிராக் குப்தா பேசுகையில், "தனது உறுப்பினர்களின் தோழமை உணர்வின் வழியாக சமூக சேவையை ஆற்றுவதில் எம் ஆர் டி 1 நம்பிக்கைக் கொண்டிருக்கிறது. சமூக சேவையின் மூலம் இச்சமுதாயத்தில் ஆக்கப்பூர்வ மாற்றத்தை ஏற்க வேண்டும் என்ற எமது குறிக்கோளைச் சார்ந்து, கடந்த 65 ஆண்டுகளுக்கும் அதிகமாக பல்வேறு அறக்கொடை அமைப்புகள் மற்றும் மக்கள் நலவாழ்வுக்கான நிறுவனங்களுக்கு உதவும் நோக்கத்தோடு நாங்கள் நிதித்திரட்டலை தொடர்ந்து செய்துவருகிறோம். இந்த ஆண்டு எமது வருடாந்திர அறக்கொடை நிதித்திரட்டல் நிகழ்வில் ஒரு அங்கமாக மகேஷ் மெமோரியல் டிரஸ்ட் என்ற சமூக சேவை அமைப்போடு நாங்கள் ஒருங்கிணைந்திருக்கிறோம்.

இந்த டிரஸ்ட், அடையாரில் உள்ள கேன்சர் இன்ஸ்டிடியூட்டின் கூட்டாண்மையோடு, குழந்தைகளுக்கான புற்றுநோய் சிகிச்சை வார்டு ஒன்றை நிர்வகித்து வருகிறது. இந்நிகழ்வின் மூலம் திரட்டப்படும் நிதியானது, புற்றுநோய் மீது பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகளை அதிகரிக்கவும் மற்றும் புற்றுநோயாளிகளுக்கு, குறிப்பாக பொருளாதார ரீதியில் ஏழ்மையான பின்னணியை கொண்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை ஆகியவற்றை இன்னும் விரிவுபடுத்தவும் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று கூறினார்.

13 ஆண்டுகளாக புற்றுநோயை எதிர்த்துப் போராடி 2002 அக்டோபர் மாதத்தில் உயிரிழந்தவரும் மற்றும் மக்களால் அதிகம் மதிக்கப்பட்ட இசையமைப்பாளருமான திரு. மகேஷ் மகாதேவன் அவர்களது நினைவை போற்றும் வகையில் இந்த டிரஸ்ட் நிறுவப்பட்டது. சமீபத்திய ஆண்டுகளில், அடையார் கேன்சர் இன்ஸ்டிடியூட்டில் "மகேஷ் நினைவு குழந்தைகளுக்கான புற்றுநோய் சிகிச்சை மையத்தை" உருவாக்கும் நோக்கத்திற்காக டிரஸ்ட்டின் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குழந்தைகளது சிகிச்சைக்கான இந்த வார்டில், விளையாடுவதற்கான பகுதி, உணவருந்தும் அறை, படுக்கை வசதிகள் கொண்ட பொது வார்டு மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகிய நவீன வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளை கருத்தில் கொண்டு இக்கட்டிடத்தின் வண்ணமும், உட்புற அலங்காரமும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. சிகிச்சை பெறவும் மற்றும் பாதிப்பிலிருந்து மீண்டு குணமடையவும், நம்பிக்கையும், உற்சாகமும் கலந்த சிறப்பான சூழலை இந்த சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கம். எனினும், குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை உலகளவில் புற்றுநோய் சிகிச்சைக்கான செலவுகள் உயர்ந்து வருவதாலும், முழுமையான சிகிச்சைக்கான நிதி ஆதரவை வழங்குவதன் மூலம் இக்குழந்தைகளை பாதுகாக்க வசதியற்ற குடும்பத்தினருக்கு உதவி அவர்களது நிதிச் சுமையை குறைப்பதற்காக எம் ஆர் டி 1 மற்றும் எம் எம் டி ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# இந்த திருமண சீசனில், எம் எம் டி சி -பி ஏ எம் பி இன் 24கே, 999.9 சுத்த தங்க ரோஜா தொங்கல் ஐ பரிசாக வழங்குங்கள்




சென்னை, நவம்பர் 23 2022: திருமண சீசன் நெருங்கி வருவதால், சரியான திருமணப் பரிசைத் தேர்ந்தெடுப்பதுதான் மக்களை ஆட்டிப்படைக்கும் மிகப்பெரிய கேள்வி. இந்தியாவின் ஒரே எல் பி எம் எ அங்கீகாரம் பெற்ற தங்கம் மற்றும் வெள்ளி சுத்திகரிப்பு நிலையமான எம் எம் டி சி -பி ஏ எம் பி, சரியான வழங்களைக் கொண்டுள்ளது: அதன் தங்க ரோஜா தொங்கல்.

அன்பு மற்றும் காதல் சின்னமாக, இந்த தொங்கலில் 108 பெரிய மற்றும் 1,008 சிறிய ரோஜா இதழ்கள் கொண்ட ரோஜா உள்ளது, மேலும் இப்போது எம் எம் டி சி -பி ஏ எம் பி இன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் கிடைக்கிறது. ரோஜா வடிவமைப்பு 24 கே 999.9 தூய்மையான 2 கிராம் தங்கத்தில் ஓவல் வடிவ பதக்கத்தில் கிடைக்கிறது. ரோஜாவின் வளமான கலாச்சாரம் மற்றும் முக்கியத்துவத்தை இந்து மதம் மட்டுமல்ல, கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமிய மதத்திலும் தழுவுவதை நோக்கமாகக் கொண்டது, இந்த பிரத்யேகமாக கவனமாக வடிவமைக்கப்பட்ட ரோஜா தொங்கல் உலகில் அன்பு மற்றும் பாசத்தின் சின்னமாக உள்ளது. இது உங்களுக்கும் அல்லது உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் ஒரு சிறந்த பரிசாக இருக்கலாம்.

இந்த அறிமுகம் குறித்து பேசிய எம் எம் டி சி -பி ஏ எம் பி யின் எம்டி மற்றும் சிஇஓ விகாஸ் சிங், “எம் எம் டி சி -பி ஏ எம் பி இல், நுகர்வோருக்கு சிறந்ததை வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம், எனவே தங்க சேகரிப்பில் மற்றொரு தயாரிப்பை கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த 24கே (999.9) 2 கிராம் தங்க ரோஜா தொங்கலானது தேவையை மனதில் கொண்டு மற்றும் மேம்பட்ட சுவிஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. எங்கள் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வாடிக்கையாளர் அனுபவத்தை அதிகரிக்கும் வகையில் எதிர்காலத்தில் பல்வேறு நாணயங்கள் மற்றும் பதக்கங்களை வெளியிட திட்டமிட்டுள்ளோம்." என்று கூறினார்.

இந்தியா எப்பொழுதும் கலாச்சாரம் மற்றும் செல்வத்தில் செழுமையாக இருந்து வருகிறது, மேலும் தங்கத்தால் செய்யப்பட்ட நாணயங்கள் மற்றும் பதக்கங்களைச் சேர்ப்பதன் மூலம், எம் எம் டி சி -பி ஏ எம் பி 999.9 தங்கத்தை பரிசளிப்பதன் உணர்வை தொடர்ந்து கொண்டு வருகிறது. 2008 இல் நிறுவப்பட்ட எம் எம் டி சி -பி ஏ எம் பி ஆனது தங்கம் --- டிஜிட்டல் தங்கம், விலைமதிப்பற்ற உலோகங்கள் (தங்கம் & வெள்ளி), அச்சிடப்பட்ட நாணயங்கள் (தங்கம் & வெள்ளி) மற்றும் பழைய தங்கத்தை மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றில் இந்தியாவின் ஒரே முழுமையான ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கியுள்ளது. எம் எம் டி சி -பி ஏ எம் பி ஏற்கனவே டிஜிட்டல் தங்கத்தில் இந்தியாவின் முன்னணியில் உள்ளது மற்றும் வலுவான வாடிக்கையாளர் தளத்தை இந்தியா முழுவதும் கொண்டுள்ளது. இந்த பிராண்ட் இந்த பிராந்தியத்தில் மேலும் முன்னேறி வருவதால், வாடிக்கையாளர்களுக்கு உலகில் கிடைக்கும் மிக உயர்ந்த தூய்மை மற்றும் சிறந்த சுவிஸ் கைவினைத்திறனை வழங்க பார்க்கிறது.

ஒவ்வொரு எம் எம் டி சி -பி ஏ எம் பி தயாரிப்பும் ஒரு தனிப்பட்ட எண்ணைக் கொண்டுள்ளது மற்றும் தயாரிப்பு நம்பகத்தன்மையை உறுதி செய்ய மதிப்பீட்டாளர் சான்றளிக்கப்பட்ட கொள்கலனில் வருகிறது. எம் எம் டி சி -பி ஏ எம் பி இன் தயாரிப்புகள் சாதகமான எடை திறனை வழங்குகின்றன, இது நீங்கள் வாங்கும் ஒவ்வொரு நாணயம் அல்லது பட்டியும் பட்டியலிடப்பட்ட எடையை விட அதிக எடையுடன் இருக்கும் என்று உத்தரவாதம் அளித்து வாடிக்கையாளர்கள் தங்கள் முதலீட்டிற்கான அதிக மதிப்பைப் பெறுவதை உறுதி செய்கிறது.

# கோத்ரெஜ் இயான் - வெல்வெட் சீரிஸ் வாஷிங் மெஷின்களின் புதிய பிரீமியம் வரம்பில் உங்கள் சலவைக்கு சிறந்த அனுபவத்தை வழங்குங்கள்



சென்னை, நவம்பர் 23 2022: கோத்ரெஜ் குழுமத்தின் முதன்மை நிறுவனமான கோத்ரேஜ் & பாய்ஸின் வணிகப் பிரிவான கோத்ரேஜ் அப்ளையன்சஸ், 5-ஸ்டார் தரமதிப்பீடு பெற்ற ஈயான் வெல்வெட் வரிசையுடன் முழுமையான தானியங்கி டாப்-லோட் வாஷிங் மெஷின்களின் பிரீமியம் வரம்பை விரிவுபடுத்தியுள்ளது. அதிநவீன தொழில்நுட்பங்கள், மேம்பட்ட உடல்நலம் மற்றும் சுகாதார அம்சங்கள் மற்றும் சீரில்லாததை அகற்றும் அழகியல் ஆகியவற்றுடன், இது பிரபலமான அம்சங்களுடன் வேறுபட்ட தயாரிப்புகளை விரும்பும் புதுயுக வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தேர்வாகும்.

இந்த கோத்ரெஜ் இயான் வெல்வெட் வரம்பு வாஷிங் மெஷின்கள், ஃப்ளெக்ஸி வாஷ் போன்ற பல்வேறு மேம்பட்ட அம்சங்களுடன் சக்திவாய்ந்தவை -26 தனிப்பயனாக்கக்கூடிய வாஷ் புரோகிராம்கள், அனைத்து விதமான ஆடைகள் மற்றும் கறைகளுக்கு மிகவும் பொருத்தமான துவைப்பிற்காக முன் ஊறவைத்தல், கழுவுதல், துவைத்தல், சுழலும் நேரம் மற்றும் நீர் நிலை ஆகியவற்றின் உகந்த கலவையை அனுமதிக்கிறது. ~ஜீரோ பிரஷர் (0.02 எம் பி எ) தொழில்நுட்பம் குறைந்த அழுத்த நிலையிலும் இயந்திரத்தை இயக்க அனுமதிக்கிறது மற்றும் மற்ற இயந்திரங்களை விட, பூஜ்ஜிய அழுத்தத்திற்கு அருகில் கூட, 60% வேகமாக தொட்டியை நிரப்புகிறது (தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களில்) ரோலர் கோஸ்டர் வாஷ் தொழில்நுட்பம் ஆனது, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட புவியீர்ப்பு டிரம், ஆழமான அக்வா ஜெட் பல்ஸேட்டர் ஆகியவற்றின் கலவையுடன் கழுவும் கொந்தளிப்பு மற்றும் நீரோட்டத்தை அதிகரிப்பதன் மூலம் சிறந்த சுத்தம் அளிக்கிறது. இந்த மெஷின் சூப்பர் ட்ரை விருப்பமும் கொண்டுள்ளது - அதிகப்படியான ஈரப்பதத்தை அகற்றுவதற்கான கூடுதல் சுழல் சுழற்சி, டெனிம்கள் மற்றும் கனமான ஆடைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பின்பக்க கண்ட்ரோல் பேனல் கண்ட்ரோல்களுக்குள் நீர் கசிவதைத் தடுக்கிறது. கூடுதலாக, டப் க்ளீன் பயன்முறையானது, மெஷின் மற்றும் துணிகளின் சுகாதாரத்தை பராமரிக்க டப், லின்ட் ஃபில்டர், பல்சேட்டர் மற்றும் பேலன்சர் ரிங் ஆகியவை நன்கு சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்கிறது.

கோத்ரெஜ் அண்ட் பாய்ஸின் முதன்மை நிறுவனமான கோத்ரெஜ் அப்ளையன்சஸ் நிறுவனத்தின் வணிகத் தலைவரும், நிர்வாகத் துணைத் தலைவருமான கமல் நந்தி, புதிய சலுகையைப் பற்றிப் பேசுகையில், “அனைத்து புவியியல் மற்றும் விற்பனை நிலையங்களில் உள்ள பிரீமியம் பிரிவுகளின் வளர்ச்சியை நாங்கள் காண்கிறோம், மேலும் இந்த ஆண்டு, தொற்றுநோய்க்கு முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், மொத்த பங்களிப்பில் பிரீமியம் கலவை இரட்டிப்பாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒய் டி டி அக்டோபர் தரவு, ஃப்ரோஸ்ட் ஃப்ரீ ரெஃப்ரிஜிரேட்டர்கள் மற்றும் ஃபுல்லி ஆட்டோமேட்டிக் வாஷிங் மெஷின்கள் மூலம் பிரீமியம் போக்கை மீண்டும் நிறுவி தொடர்ந்து வேகமாக வளர்ந்து வருகிறது. எங்களின் புதிய ஈயான் வெல்வெட் வரம்பு வாஷிங் மெஷின்கள், சிறந்த செயல்திறன் மற்றும் அதிக அழகியல் மெஷின்களுக்கு மேம்படுத்த விரும்பும் நுகர்வோருக்கு ஏற்றதாய் இருக்கிறது." என்று கூறினார்.

கோத்ரேஜ் அப்ளையன்சஸ் - வாஷிங் மெஷின்ஸ் தயாரிப்புக் குழுத் தலைவர் ராஜிந்தர் கவுல் மேலும் கூறுகையில், “இந்த வரம்பை அறிமுகப்படுத்தியதன் மூலம், இந்த பிரீமியம் பிரிவில் இந்த நிதியாண்டு இறுதிக்குள் 50% வளர்ச்சியை எட்டுவோம் என்று எதிர்பார்க்கிறோம். வருகின்ற மாதங்களில், அதிக திறன்கள் மற்றும் அதிக தொழில்நுட்பங்களைச் சேர்ப்பதன் மூலம் இந்த தளத்தை மேலும் விரிவுபடுத்துவோம்." என்று கூறினார்.

இந்த வாஷிங் மெஷின் வரம்பின் அழகியல், புதுயுக ஆட்டோமொபைல்களில் இருந்து ஈர்க்கப்பட்டுள்ளது - வளைந்த வெளிர் நிறமுள்ள கடினமான கண்ணாடி, உள்ளமைந்த மறைக்கப்பட்ட கைப்பிடி, மெட்டாலிக் குரோம் அலங்காரம் மற்றும் வசதியான ஃபிளிப் லிட் டிடர்ஜென்ட் டிராயருடன் கூடிய மென்மையான மூடும் மூடி ஆகியவற்றை வழங்குகிறது. 5-ஸ்டார் தரமதிப்பீடு பெற்ற மாடலாக இருப்பதால், இது மின் நுகர்வை மேம்படுத்த உதவுகிறது மற்றும் அதிக சேமிப்பை அளிக்கிறது. இந்த வரிசை ஆனது 6.5 கிலோ, 7 கிலோ மற்றும் 7.5 கிலோ எடை திறன்களில் மெட்டாலிக் ப்ளாக், ஆட்டம் ரெட், சில்வர் கிளேஸ் & கிராஃபைட் கிரே போன்ற பல கவர்ச்சிகரமான வண்ண விருப்பங்களில் கிடைக்கிறது மற்றும் அதன் மோட்டாருக்கு 12 வருட உத்தரவாதமும் 3 வருட விரிவான உத்தரவாதத்துடன் ரூ. 31,000 எம்.ஆர்.பி இல் தொடங்குகிறது. கோத்ரேஜ் இயான் - வெல்வெட் வரிசை வாஷிங் மெஷின்கள் சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் பிராண்டின் இ-ஸ்டோர், அமேசான் மற்றும் ஃப்ளிப்கார்ட் மூலம் ஆன்லைனில் கிடைக்கும்.

# ‘எல்லாம் ஓகே வா!‘: ‘பெடியா‘ (ஓநாய்) திரைப்படத்தில் இருந்து உற்சாகமிக்க பாடல் வெளியீடு

## பெடியா திரைப்படத்தை நவம்பர் 25 அன்று தமிழகமெங்கும் பிரமாண்டமான முறையில் ஸ்டுடியோ கிரீன் வெளியிடுகிறது




சென்னை, நவம்பர் 23 2022: மேடாக் பிலிம்ஸ் தயாரிப்பில் ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும், அமர் கௌஷிக் இயக்கத்தில் வருண் தவான் நடிக்கும் 'பெடியா' (ஓநாய்) திரைப்படத்தில் இருந்து 'எல்லாம் ஓகே வா!' எனும் உற்சாகமூட்டும் புதிய பாடல் வெளியிடப்பட்டுள்ளது. பெடியா திரைப்படத்தை நவம்பர் 25 அன்று தமிழகமெங்கும் பிரமாண்டமான முறையில் தமிழ் திரை உலகின் முன்னணி தயாரிப்பு நிறுவனமான ஸ்டுடியோ கிரீன் வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. கதாநாயகன் வருண் தவான் மற்றும் அவரது நம்பிக்கை மிகுந்த ஓநாய் நண்பர்கள் பழைமையான கார் ஒன்றில் மகிழ்ச்சியான சாலைப் பயணம் மேற்கொள்வது போன்று 'எல்லாம் ஓகே வா!' பாடல் அமைந்துள்ளது. 'எல்லாம் ஓகே வா!' பாடலை உற்சாகத்துடன் பாடிகொண்டே வருண் தவான், அபிஷேக் பானர்ஜி மற்றும் பாலின் கபக் உள்ளிட்டோர் அருணாச்சலப் பிரதேசத்தின் இயற்கை எழில் மிகு சாலைகளில் பயணிக்கின்றனர். மூன்று நண்பர்களுக்குள் உள்ள ஒற்றுமையையும் நட்பையும் இப்பாடல் நன்றாக பிரதிபலிக்கிறது. அவர்கள் பயன்படுத்தும் பழைய மாருதி 800 கார் கடந்த காலத்தை கச்சிதமாக நினைவுப்படுத்துகிறது. சூழலுக்கு ஏற்ப இசையும், பாடல் வரிகளும் இரண்டற கலந்து கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தாக அமைந்துள்ளன. சச்சின்-ஜிகார் இசையில், அமிதாப் பட்டாச்சார்யா மற்றும் எஸ் சுனந்தனின் வரிகளில் உருவான பாடலை சந்தோஷ் ஹரிஹரன், வேலு மற்றும் கே ஜே ஐயனார் பாடியுள்ளனர். பாடலை பற்றி பேசிய இசை அமைப்பாளர்கள் சச்சின்-ஜிகார், "இளமை ததும்பும், உற்சாகமூட்டும் பாடலாக 'எல்லாம் ஓகே வா!' அமைந்துள்ளது. புதுமையான மெட்டுடனும், புத்துணர்ச்சி தரும் வரிகளுடனும் இசையின் மாயாஜலத்தை வெளிப்படுத்தும் வகையில் இப்பாடல் இருக்கிறது," என்றனர். 'பெடியா' திரைப்படத்தில் இருந்து ஏற்கனவே வெளியிடப்பட்ட மூன்று பாடல்கள் சூப்பர் ஹிட் ஆகியுள்ள நிலையில், தற்போது வெளியாகி உள்ள 'எல்லாம் ஓகே வா!' பாடலும் வெற்றி பட்டியலில் இணைந்து பயணத்திற்கு உகந்த நண்பனாக திகழும் என்று படக்குழுவினர் தெரிவிக்கின்றனர். ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும், மேடாக் பிலிம்ஸ் தயாரிப்பில், வருண் தவான், கீர்த்தி சனோன், தீபக் தோப்ரியால் மற்றும் அபிஷேக் பேனர்ஜீ நடித்துள்ள 'பெடியா' நவம்பர் 25 அன்று தமிழ், ஹிந்தி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் பான்-இந்தியா படமாக 2டி மற்றும் 3 டியில் வெளியாகவுள்ளது. இப்படத்தை தமிழ்நாடு முழுவதும் ஸ்டுடியோ கிரீன் வெளியிட உள்ளது.

# தகுதி வாய்ந்த நிறுவன வாங்குனர்களுக்கு (கியூ ஐ பி) நிறுவனத்தின் சமபங்குகளை வழங்கவிருக்கும் விகாஸ் லைஃப்கேர் லிமிடெட்

கோயம்புத்தூர், நவம்பர் 23 2022: பிளாஸ்டிக்குகள், செயற்கை மற்றும் இயற்கை ரப்பர்களுக்கு சிறப்பு அடிடிவ்ஸ்களையும் (முக்கிய சேர்க்கைப் பொருட்கள்) பாலிமர் மற்றும் ரப்பர் காம்பவுண்ட்களையும் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள விகாஸ் லைஃப்கேர் லிமிடெட், செபி ஐ சி டி ஆர் ஒழுங்குமுறை விதிகளின் கீழ், குறித்துரைக்கப்பட்டுள்ள விலை நிர்ணய ஃபார்முலாவின் அடிப்படையில் ரூ.1 என்ற முகமதிப்புள்ள சமபங்குகளை ஒரு சமபங்கிற்கு ரூ. 4.88 என்ற அடிநிலை விலையில் தகுதி பெற்ற நிறுவனங்களுக்கு கியூ ஐ பி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. பி எஸ் ஈ & என் எஸ் ஈ ஆகிய இரு பங்குச் சந்தைகளிலும் விகாஸ் லைஃகேரின் பங்குகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அஞ்சல் வாக்குகள் வழியாக உறுப்பினர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கியூ ஐ பி பங்கு வெளியீட்டு அளவு தொகையின் உச்சபட்ச வரம்பு ரூ.2000 மில்லியன் என இருக்கின்ற நிலையில், தற்போது வெளியிடுவதற்கு (கியூ ஐ பி வெளியீட்டின் மூன்றாவது டிராஞ்ச் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அளவு ரூ. 500 மில்லியன் என்பதா இருக்கிறது (எஞ்சியுள்ள தொகையான ரூ.1000 மில்லியன் இந்நிறுவனத்தால், அவசியப்படும்போது பின் தொடர்ந்து வெளியிடப்படும் டிராஞ்ச்கள் மூலம் திரட்டப்படும். தற்போதைய டிராஞ்ச் கியூ ஐ பி பங்குகளின் வெளியீடு, 2022 நவம்பர் 15 அன்று தொடங்கியது. “நெல் உமியிலிருந்து செல்லுலோஸ், லிக்னின் மற்றும் சிலிக்கா போன்ற பல்வேறு பயனுள்ள பொருட்களை உருவாக்குவது மீது ஆராய்ச்சி உள்ளீடுகளையும், பணியையும் பகிர்ந்து கொள்வதற்காக உலகத்தரம் வாய்ந்த மூன்று உயர்கல்வி நிறுவனங்களோடு ஒத்துழைப்பு செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதை இந்நிறுவனம் சமீபத்தில் அறிவித்திருந்தது. இந்த வேளாண் - சுழற்சி செயல்திட்டத்தில் புதுடெல்லியை தலைமையகமாக கொண்டு இயங்கும் இந்நிறுவனம், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (பி எச் யூ)- வாரணாசி மற்றும் ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகத்தோடு இணைந்து செயல்படுகிறது. இந்த ஒத்துழைப்பு நடவடிக்கை மட்டுமின்றி, இதே நோக்கத்திற்காக லைன்ஃபுளோ டெக்னாலஜிஸ் ஏ பி மற்றும் லிக்சியா கம்ப்யூட்டர் போன்ற பிரபல ஸ்வீட நாட்டு நிறுவனங்களுடனும், விகாஸ் லைஃப்கேர் லிமிடெட் கூட்டாண்மையை மேற்கொண்டிருக்கிறது. ஒரு சுழற்சிப் பொருளாதாரத்தை உருவாக்குவதும் மற்றும் உற்பத்தி, மீட்சி மற்றும் மறுபயன்பாடு வழியாக நீடித்த நிலைப்புத்தன்மையை எட்டுவதன் இந்த ஒத்துழைப்பு செயல்பாட்டின் நோக்கமாகும். இதன்மூலம் வாழ்நாள் செயல்பாட்டின் முடிவில் புராடக்ட்டை அதன் மூல வடிவத்திற்கு திரும்பவும் அனுப்புவதும் மற்றும் இதன்மூலம் பூஜ்ய அல்லது மிக மிக குறைவான கழிவே ஏற்படுமாறு செய்வதும் இதன் துணை குறிக்கோளாகும்.”

# கார்னியர் நிறுவனத்தின் முதல் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மையம் சென்னையில் திறப்பு

## கடலில் கலக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை அழகான பேக்கிங்காக மாற்ற ஒருங்கிணைப்பு



சென்னை, நவம்பர் 23 2022: உலகின் மிகப் பெரிய அழகு சாதனங்களின் பிராண்டான கார்னியர், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் தனது உறுதிமொழியை வலுப்படுத்தும் வகையில், சென்னையில், பிரத்யேகப் பிளாஸ்டிக் கழிவு சேகரிக்கும் மையத்தைத் தொடங்க உள்ளது. பிளாஸ்டிஸ் ஃபார் சேஞ்ச் என்னும் சமூக அமைப்புடன் இணைந்து பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்துச் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்துள்ளது. முதல் வருடத்தில், கடலில் கலக்கவுள்ள 2000 டன் பிளாஸ்டிக் கழிவுகளை தடுத்து மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடும் உள்ளூர் சமூகங்களைச் சேர்ந்த 2000 மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ இருக்கிறது. சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் கார்னியர் நிறுவனத்தின் ஐகானிக் ஹேர்கேர் அல்ட்ரா டூ ரகப் பொருள்களுக்கான பேக்கேஜிங் பயன்பாட்டுக்காக ஒருங்கிணைக்கப்படும். முதல் முறையாக அல்ட்ரா டூ பாட்டில்கள் 100% மறுசுழற்சி செய்த பிளாஸ்டிக்களால் தயாரிக்கப்படும். இவற்றுள் 30% கடலில் கலக்க இருந்த பிளாஸ்டிக் கழிவுகளாகும். சேகரிப்புச் சேவைகள் அணுக்கம் அனைவருக்கும் கிடைக்கும் வகையில், கார்னியர் பிளாஸ்டிக் சேகரிப்பு கியாஸ்குகளைச் சென்னை, மும்பை, தில்லி உள்ளிட்ட 20 முக்கிய இடங்களில் நிறுவ உள்ளது. இதன் மூலம் நுகர்வோர் #ஒன்க்ரீன்ஸ்டெப் கொள்கையில் தாங்களாகவே ஈடுபடுத்திக் கொள்ள ஊக்குவிக்கப்படுவர். மின் வணிகக் கூட்டாளிகளான அமேசான் மற்றும் மிந்த்ரா ஆகியோருடனும் இணைந்து, இத்தளங்களில் வாங்கப்படும் ஒவ்வொரு காரினியர் பொருளுக்கும், பிளாஸ்டிக்ஸ் ஃபார் சேஞ்ச் மூலம், இரு பிளாஸ்டிக் பாட்டில்கள் மறுசுழற்சி செய்யப்படும். இது குறித்து கார்னியர், லே'ஓரியல் - குளோபல் பிராண்ட் தலைவர், ஏட்ரியன் கோஸ்காஸ் கூறுகையில் 'அழகு சாதனங்கள் தயாரிக்கும் உலகின் முன்னணி பிராண்ட்களுள் ஒன்றான கார்னியர் நிறுவனம் சுற்றுச்சூழல் சமநிலை பாதிக்காத நிலையான அழகுக்கான அணுக்கம் அனைவருக்கும் கிடைக்கும் வகையில், இந்தப் பூமியின் மீது ஆக்கப்பூர்வ விளைவை ஏற்படுத்த உதவும் தனித்துவமான வாய்ப்பைப் பெற்றுள்ளது. உங்களுக்கும், பூமிக்கும் நலமளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில், கார்னியர் க்ரீன் ப்யூட்டியுடன் அழகுத் துறையின் இயக்கத்தை மாற்ற விரும்புகிறோம். பிளாஸ்டிக்ஸ் ஃபார் சேஞ்ச் உள்ளிட்ட சமூக அமைப்புகளுடன் கைகோர்த்து பூமியின் மீது ஆக்கப்பூர்வ விளைவை ஏற்படுத்த உறுதி பூண்டுள்ளோம். அந்த வகையில் பிளாஸ்டிக்ஸ் ஃபார் சேஞ்ச் அமைப்புடனான கூட்டாண்மை மூலம் எங்களது மைல்கல் சாதனையாகச் சென்னையில் பிரத்யேகப் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிப்பு மையத்தைத் திறந்துள்ளோம். இந்தப் புதிய மையம் மூலம் சுற்றுச்சூழலில் மட்டுமின்றி உள்ளூர் சமூகத்திலும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவோம் என நம்புகிறோம்' என்றார்.

பிளாஸ்டிக்ஸ் ஃபார் சேஞ்ச் சிஇஓ / நிறுவனர் ஆண்ட்ரூ ஆல்மேக் பேசுகையில் 'பிளாஸ்டிக் கழிவுகளை மூலப் பொருளாகப் பயன்படுத்தி அந்த பகுதி வாசிகளுக்கு கண்ணியமான வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கும் வறுமையை ஒழிப்பதற்கும் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்னும் நோக்கத்துடன் 'பிளாஸ்டிக்ஸ் ஃபார் சேஞ்ச்' தொடங்கப்பட்டது. மறுசுழற்சி விநியோகச் சங்கிலியின் அடிப்பகுதியில் உள்ள பிளாஸ்டிக்ஸ் கழிவு சேகரிப்பாளர்கள் பொருளாதாரத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தை உருவாக்குகிறோம். 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு மில்லியன் கழிவு சேகரிப்பாளர்களை நியாயமான வர்த்தக விநியோகச் சங்கிலிகள் மூலம் இணைப்பதே எங்கள் குறிக்கோள். இந்த சேகரிப்பு மையம், இயற்கையை பாதிக்காத அழகு பயணத்தில், பிளாஸ்டிக்ஸ் ஃபார் சேஞ்ச் மற்றும் கார்னியருக்கான ஒரு முக்கிய மைல்கல் ஆகும். 2020 தொடங்கி கார்னியர் நிறுவனம் பிளாஸ்டிக்ஸ் ஃபார் சேஞ்ச் அமைப்புடன் இணைந்து பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்து, மறுசுழற்சி செய்து வருகிறது. இதன் மூலம் அமைப்பு சாரா பிளாஸ்டிக் கழிவுப் பொருள்கள் சேகரிப்பாளர்கள், கழிவுப் பொருள்கள் தொழில் முனைவோர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நிலையான வருமானம் பெறவும், வாழ்வாதாரம் மேம்படவும் உதவியுள்ளது. 2020 முதல் கார்னியர் 539+ டன் பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்ததன் மூலம் 3200க்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளனர்.

# சன்ஸ்டோனின் பலன்கள் தங்கவேலு பொறியியல் கல்லூரியில் இப்போது கிடைக்கின்றன

சென்னை, நவம்பர் 23 2022: 35 நகரங்களில் 45க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் இருப்பைக்கொண்டுள்ள, இந்தியாவின் முன்னணி உயர்கல்வி நிறுவனமான சன்ஸ்டோன், இப்போது சென்னையில் உள்ள தங்கவேலு பொறியியல் கல்லூரியில் அதன் பலன்களை வழங்குகிறது. அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்த தங்கவேலு பொறியியல் கல்லூரி, இளங்கலை மற்றும் முதுகலை நிலைகளில் பல்வேறு துறைகளில் பரந்த அளவிலான திட்டங்களை வழங்குகிறது.

இந்த கூடுதலாக, சன்ஸ்டோனின் பலன்கள் தங்கவேலு பொறியியல் கல்லூரியால் வழங்கப்படும் (படிப்புகள்) உடன் இப்போது கிடைக்கும். சன்ஸ்டோனின் பலன்கள், தொழில் சார்ந்த கல்வி மற்றும் திறன் திட்டங்களை அணுக உதவி, மாணவர்களை கல்லூரியில் படிக்கும் போதே வேலைக்குத் தயார்படுத்துகிறது. கூடுதலாக, சன்ஸ்டோனின் 1000க்கும் அதிகமான ஆட்சேர்ப்பாளர்களின் வலுவான நெட்வொர்க்குடன், இந்தச் சேர்ப்பு, சிறந்த நிறுவனங்களில் மாணவர்களுக்கு பெரிய அளவிலான வேலை வாய்ப்பு வாய்ப்புகளை உருவாக்கும்.

மாநிலம் முழுவதிலுமிருந்து உயர்கல்வி ஆர்வலர்களை சென்னை ஈர்க்கிறது. அரசின் தொடர் கவனம் மற்றும் முயற்சியால், மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தரமான கல்வியை வழங்குவதற்கும் தமிழகக் கல்வி முறை தன்னைத்தானே மேம்படுத்தி மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. சமீப காலங்களில், அரசாங்கம் அதன் இளம் மக்களுக்கு உயர்கல்வியை செயல்படுத்த புதுமையான திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.

இந்த அறிவிப்பைப் பற்றி கருத்து தெரிவித்த சன்ஸ்டோனின் இணை நிறுவனர் மற்றும் சிஓஓ திரு. பியூஷ் நங்ரு, "தங்கவேலு பொறியியல் கல்லூரியை எங்கள் வளாகங்களின் வலையமைப்பில் சேர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் சென்னையில் சன்ஸ்டோனின்

பலன்களை வழங்குகிறோம். இந்தியாவில் குறைவாக பயன்படுத்தப்படும், அபரிமிதமான ஆற்றல் கொண்ட பொறியாளர்களின் திறமைக் குழு உள்ளது. இந்த ஒத்துழைப்பின் மூலம், இளைஞர்களுக்கு, நிச்சயமாக அவர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் தொழில் சார்ந்த திறன்களை வழங்குவதை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம், சன்ஸ்டோனில், எங்கள் மாணவர்களிடையே எதிர்காலத் தயார்நிலையை ஏற்படுத்தவும், புதிய ஆர்வலர்களுக்கு உயர்கல்வியை அணுகக்கூடியதாக மாற்றவும் நாங்கள் விரும்புகிறோம்." என்று கூறினார்.

சன்ஸ்டோனுடன் வளாகங்களில் சேரும்போது, ஆழ்ந்த தொழில்துறை-ஒருங்கிணைந்த இன்டர்ன்ஷிப்கள் மற்றும் திட்டங்களில் தங்களைப் பதிவுசெய்துகொள்வது, அதிக தேவையுள்ள தொழில்நுட்ப திறன்களைக் கற்றுக்கொள்வது மற்றும் தங்களுக்கான தொழில்முறை போர்ட்ஃபோலியோவை உருவாக்குதல் மற்றும் மேம்பட்ட சான்றிதழ்களைப் பெறுவதன் மூலம், தொழில் சார்ந்த பாடத்திட்டத்தை மாணவர்கள் அதிகம் பயன்படுத்தலாம், மேலும் முழுமையான மற்றும் விரிவான கல்விக்காக, சன்ஸ்டோன் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் மென் திறன்கள் பயிற்சி, ஆர்வம் சார்ந்த கிளப்புகளில் அனுமதி, விளையாட்டு சந்திப்புகள், கலாச்சார விழாக்கள், மாணவர் பரிமாற்ற திட்டங்கள் மற்றும் சன்ஸ்டோனின் மாணவர் நெட்வொர்க்கின் செழிப்பான டிஜிட்டல் சமூகத்திற்கான அணுகல் மற்றும் பலவற்றையும் வழங்குகிறது.

இதுகுறித்து தங்கவேலு பொறியியல் கல்லூரியின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "இந்தியாவின் பொறியியல் துறை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது, அங்கு வளர்ந்து வரும் போட்டிக்கு முன்னால் நிற்பதற்கு நிறுவனங்களுக்கு பல திறன் கொண்ட பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இந்த மாற்றங்களை நாங்கள் தொடர்ந்து கவனித்து வருகிறோம் மற்றும் தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப எங்கள் பாடத்திட்டத்தை சீரமைக்கிறோம். சன்ஸ்டோனுடனான எங்கள் ஒத்துழைப்பு, எங்கள் மாணவர்களுக்கு உயர்தர கல்வியை வழங்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்." என்று கூறினார்.

# ஜல்லிக்கட்டுக்கு மட்டும் ஏன் எதிர்ப்பு ? ; அதிர்ச்சி தகவலை வெளியிட்ட 'காரி' பட இயக்குநர்

## எத்தனை தடை போட்டாலும் ஜல்லிக்கட்டை அழிக்க முடியாது ; சசிகுமார் ஆவேசம்





சென்னை, நவம்பர் 23 2022: பிரின்ஸ் பிக்சர்ஸ் சார்பில் எஸ்.லக்ஷ்மன் குமார் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'காரி'. சசிகுமார் கதாநாயகனாக நடிக்க, மலையாள நடிகை பார்வதி அருண் இந்த படத்தின் மூலம் தமிழில் கதாநாயகியாக அறிமுகமாகிறார் அறிமுக இயக்குனர் ஹேமந்த் இந்த படத்தை இயக்கியுள்ளார். டி. இமான் இசையமைத்துள்ளார்.

வில்லனாக பாலிவுட் நடிகர் ஜேடி சக்கரவர்த்தி நடிக்க, மேலும் முக்கிய வேடங்களில் ஆடுகளம் நரேன், நாகிநீடு, ரெடின் கிங்ஸ்லி, அம்மு அபிராமி, பிரேம் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். வரும் நவம்பர் 25ஆம் தேதி காரி திரைப்படம் வெளியாக உள்ள நிலையில், இந்த படத்தின் புரமோஷன் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தயாரிப்பாளர் லக்ஷ்மன் குமார் பேசும்போது, "ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அனுமதி கிடைக்காதிருந்த சமயத்தில் தான் இந்த கதையை இயக்குனர் ஹேமந்த் என்னிடம் கூறினார். இந்த கதையை கேட்டதும் எப்படியாவது இதை படமாக எடுத்துவிட வேண்டும் என முடிவு செய்தோம். அதன்பிறகு தமிழக இளைஞர்களின் புரட்சி மூலம் ஜல்லிக்கட்டுக்கான தடை நீங்கியது. சசிகுமாருக்கு என்றே அளவெடுத்து தைக்கப்பட்ட ஒரு சட்டை போல இந்த கதையும் கதாபாத்திரமும் அமைந்துவிட்டது. காளைகள், குதிரைகளை வைத்து மிகுந்த சிரமத்திற்கு இடையே தான் இந்த படத்தை எடுத்துள்ளோம். அதிலும் மைசூர் எடுக்கப்பட்ட காட்சிகளில் பெரும்பாலும் ரேஸ் குதிரைகளை வைத்தே காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. சமீப காலமாக நம் நம்பிக்கைகளை தகர்க்கும் விதமாக சில விஷயங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது ஆனால் அதை தடுத்து, நம்பிக்கை கொடுக்கும் விதமாக இந்தப்படம் இருக்கும்" என்று கூறினார்.

நடிகர் ரெடின் கிங்ஸ்லி பேசும்போது. "எனக்கு டூவீலரே சரியாக ஓட்டத்தெரியாது. ஆனால் இந்த படத்தில் என்னை ஆட்டோ ஓட்ட வைத்து விட்டார்கள். அதிலும் சசிகுமார், நாயகி பார்வதி அருண் இருவரையும் வைத்து நான் ஆட்டோ ஓட்ட வேண்டும். பயந்துகொண்டே தான் ஆட்டோ ஓட்டினேன்.. லவ்டுடே படம் எப்படி பெரிய வெற்றி பெற்றதோ அதேபோல இந்த படமும் வெற்றி பெறும்" என்றார்.

இயக்குனர் ஹேமந்த் பேசும்போது, "இந்த படத்தின் தயாரிப்பாளர் லக்ஷ்மன் குமாரை மேன் ஆப் தி ஆக்சன் என்று கூறினால், ஹீரோ சசிகுமாரை மேன் ஆஃப் ட்ரூ வேர்ட்ஸ் என்று சொல்வேன். படத்தின் கதையை கேட்ட சசிகுமார் நீங்க கதை சொன்ன மாதிரியே படமும் எடுத்துட்டா வெற்றிதான் என்று உற்சாகப்படுத்தினார். லோக்கல் என்ற வார்த்தையை மோசமான வார்த்தையாக நினைக்கவேண்டாம் லோக்கல் என்றால் நேட்டிவிட்டியை குறிக்கும்.. எவ்வளவு நேட்டிவிட்டியாக இருக்கிறோமோ அந்த அளவிற்கு மதிப்பு இருக்கும். ஆனால். இப்போது அந்த நேட்டிவிட்டியை தகர்க்கும் விதமாக தான் பல விஷயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றுதான் ஜல்லிக்கட்டு போன்ற தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் விளையாட்டுக்கு தடை விதிக்க முயற்சிப்பது. ஜல்லிக்கட்டுக்கு மட்டும் ஏன் எதிர்ப்பு என்றால், இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் மட்டும்தான் இளைஞர்கள் இன்னும் கலாச்சாரம் தொடர்பான விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை திசை திருப்புவதற்காகத்தான் ஜல்லிக்கட்டு தடை போன்ற விஷயங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த படத்தில் மனிதர்களின் நம்பிக்கை, உறவு சிக்கல்கள் ஆகியவற்றை கூறியுள்ளோம். மொத்தத்தில் இந்த படம் எமோசனல் ஆக்சன் ட்ராமாவாக இருக்கும்" என்றார்.

நாயகன் சசிகுமார் பேசும்போது, "இது எனக்கான கதை.. என் மண்ணின் கதை.. ஒரேமாதிரி கதையில் நடிக்கிறீர்களே, அதுவும் கிராமத்து படமாக நடிக்கிறீர்களே என்றால், நான் கிராமத்து படம் தான் பண்ணுவேன்.. அவர்களுக்கு நான் பண்ணாமல் வேறு யார் பண்ணுவார்கள்..? என்னுடைய தயாரிப்பில் ஜல்லிக்கட்டு பற்றி படம் பண்ண முயற்சித்தேன் அது முடியவில்லை. லக்ஷ்மண் குமார் தயாரிப்பில் என்னுடைய ஆசை நிறைவேறி இருக்கிறது. அம்மு அபிராமி இந்த படத்தில் மிக அருமையான குணச்சித்திர கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். என்னைக் கேட்டால் அவர் இதுபோன்று நிறைய கேரக்டர் ரோல்களில் நடிக்க வேண்டும். ஏனென்றால் இப்போது தமிழ் சினிமாவில் குணச்சித்திர கதாபாத்திரத்தில் நடிப்பதற்குத்தான் நடிகைகள் ரொம்ப குறைவாகவே இருக்கிறார்கள். இதில் வில்லனாக நடித்துள்ள நடிகர் ஜேடி சக்கரவர்த்தி, நான் ரிஸ்க் எடுத்து நடித்த காட்சிகளை பார்த்துவிட்டு, என்னை அழைத்து முதலில் பாதுகாப்பு ரொம்ப முக்கியம் என அறிவுரை கூறினார்.

ஜல்லிக்கட்டு மீது தடைகேட்டு யார் எத்தனை வழக்கு போட்டாலும் யாராலும் ஜல்லிக்கட்டு விளையாட்டை அழிக்க முடியாது. ஜல்லிக்கட்டு மாடுகளை நாங்கள் துன்புறுத்தவில்லை.. எதிர்ப்பவர்கள்தான் அதன்மூலம் மாடுகளை அழிக்க நினைக்கிறார்கள். இந்த படத்தில் பதினெட்டு வகையான மாடுகள் பற்றி சொல்லி இருக்கிறோம். என்னுடைய படங்களிலேயே அதிக பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படம் இதுவாகத்தான் இருக்கும்.

முன்பெல்லாம் விஜயகாந்த் சார் படப்பிடிப்பிலும் அவரது அலுவலகத்திலும் பாரபட்சமின்றி அனைவருக்கும் சுவையான சாப்பாடு வழங்கப்படும். அதை கேள்விப்பட்டு நான் என்னுடைய தயாரிப்பில் படங்கள் தயாரித்தபோது அதேபோல பின்பற்றினேன். நீண்டநாளைக்கு பிறகு தயாரிப்பாளர் லக்ஷ்மண் குமார் படப்பிடிப்பில் அதேபோன்று எல்லோருக்கும் சரிசமமான சிறப்பான சாப்பாடு வழங்கப்பட்டதை பார்த்தேன்.. காலம் கடந்தும் இது பேசப்படும்.. ஒரு படத்தில் நடித்தபோது சாப்பாடு சரியில்லை என்று அதன் தயாரிப்பாளரிடம் என் சம்பளத்தில் கூட கொஞ்சம் பிடித்துக்கொண்டு அதற்கு பதிலாக நல்ல சாப்பாடு போடுங்கள் என்று கூறினேன். அவர் நல்ல சாப்பாடும் போடவில்லை.. என்னுடைய சம்பளத்தையும் கொடுக்கவில்லை. இது மக்களுக்காக எடுத்த படம்.. ஜல்லிக்கட்டு பற்றிய படம்.. அனைவரும் தியேட்டரில் வந்து பார்க்க வேண்டும்.. அடுத்த வருடம் நான் மீண்டும் எனது டைரக்ஷனில் படம் இயக்குகிறேன்.. அதற்கான அறிவிப்பை இந்த படத்தின் வெற்றி விழாவில் அறிவிக்கிறேன்" என்று கூறினார்.

தொழில்நுட்ப குழுவினர் விபரம் தயாரிப்பு ; பிரின்ஸ் பிக்சர்ஸ் கே.லக்ஷ்மன் குமார் இயக்கம் ; ஹேமந்த் இசை ; டி.இமான் ஒளிப்பதிவு ; கணேஷ் சந்திரா படத்தொகுப்பு ; சிவநந்தீஸ்வரன் கலை ; மிலன் நடனம் ; ஹரி கிரண் சண்டைப்பயிற்சி ; அன்பறிவு, தினேஷ் சுப்பராயன், ஸ்டண்ட் சில்வா பாடல்கள் ; லலித் ஆனந்த், ஹேமந்த் ஆடை வடிவமைப்பு ; பூர்த்தி பிரவீண் உடை அலங்காரம் ; பெருமாள் செல்வம் ஒப்பனை கலைமாமணி வி.சண்முகம் மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

